**<u>சுருக்கம்</u>**

மாற்றுத் திறனாளிகள் நலன் – அரசு மறுவாழ்வு இலலங்கள் – தொழுநோயால் பாதிக்கப்பட்ட 5729 பயனாளிகளுக்கு கூடுதலாக தேவைப்படும் பராமரிப்பு உதவித் தொகை ரூ.97,28,000/– நிதி ஒப்பளிப்பு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (1டி) எண்: 17** | **நாள்: 16.02.2017**
**துன்முகி – மாசி, 4**
**திருவள்ளுவர் ஆண்டு, 2048**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண் 66, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.2) துறை, நாள் 12.07.2013.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க. எண் 1657/ம.இ.நிர்.3/2015, நாள் 15.07.2016.
3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க. எண் 1657/ம.இ.நிர்–3/2014, நாள் 26.09.2016.

----

**<u>ஆணை</u>:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், தொழுநோயால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 2013–2014ஆம் நிதியாண்டிலிருந்து இத்திட்டத்திற்கான வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகைக்குள் ஏற்கனவே பயன்பெறும் பயனாளிகளுக்கு மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் மூலமாக ஒவ்வொரு மாதமும் மைய வங்கி முறையின் (Core Banking System) கீழ் பராமரிப்பு உதவித் தொகை வழங்க, முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி வழங்கியும், மேலும், இத்திட்டத்தின் கீழ் ஏற்கனவே பயன்பெறும் பயனாளிகளுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்க வரவு–செலவு திட்டத்திற்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு தேவைப்படின், அதற்குரிய கருத்துருவினை அரசிற்கு அனுப்பி வைக்குமாறு முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி வழங்கியும் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், தொழுநோயால் பாதிக்கப்பட்ட கூடுதலாக கண்டறியப்பட்ட 140 பயனாளிகளுக்கு 2015–2016ஆம் ஆண்டில் செப்டம்பர், 2015 முதல் மார்ச், 2016 வரை 7 மாதங்களுக்கு ரூ.1000/– வீதம் 140 பயனாளிகளுக்கு 7 x 1000 = ரூ.9,80,000/–ம் தற்போது 2016–2017ஆம் நிதியாண்டிற்கு (ஏப்ரல், 2016 முதல் மார்ச், 2017 வரை) ரூ.16,80,000/–ம் ஆக மொத்தம் ரூ.26,60,000/– (ரூபாய் இருபத்தி ஆறு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு அரசினைக் கோரியிருந்தார்.

3. மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் ஏற்கனவே தொழுநோயால் பாதிக்கப்பட்ட 5589 பயனாளிகளுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது எனவும், செப்டம்பர் 2015 முதல் கூடுதலாக 140 பயனாளிகள் கண்டறியப்பட்டு, ஆகமொத்தம் 5729 பயனாளிகளுக்கு (5589+140) தற்போது பராமரிப்பு உதவித் தொகை வழங்க வேண்டியுள்ளது எனவும், 2016–2017 திருத்த வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.6,00,00,000/– (ரூபாய் ஆறு கோடி மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், கூடுதலாக

ரூ.97,28,000/– தேவைப்படுவதால், ரூ.6,00,00,000/– (ரூபாய் ஆறு கோடி மட்டும்) செலவிட இயலாத நிலை உள்ளது எனவும், கூடுதலாக கண்டறியப்பட்ட 140 பயனாளிகள் மற்றும் ஏற்கனவே பயன்பெறும் 5589 பயனாளிகளுக்கும் சேர்த்து மொத்தமாக ரூ.97,28,000/– கூடுதல் நிதி ஒதுக்கீடு வழங்கும்படி அரசினை கேட்டுக்கொண்டுள்ளார்.

4. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, தொழுநோயால் பாதிக்கப்பட்டு, ஏற்கனவே பயனடைந்து வரும் 5589 பயனாளிகளுக்கும், கூடுதலாக கண்டறியப்பட்ட 140 பயனாளிகளுக்கும் ஆகமொத்தம் 5729 (5589 + 140) பயனாளிகளுக்கு 2016–2017ஆம் நிதியாண்டிற்கு திருத்த வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.6,00,00,000/– போக கூடுதலாகத் தேவைப்படும் பராமரிப்பு உதவித் தொகை ரூ.97,28,000/–க்கு (ரூபாய் தொன்னூற்று ஏழு இலட்சத்து இருபத்தெட்டாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பும், இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி–4ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

"2235-Social Security and Welfare-02 – Social Welfare-104 – Welfare of aged, infirm and destitute – Sechemes in the Twelfth Five Year Plan-II State Plan-KQ – Maintenance Allowance to Leposy affected persons-09 – Grant in aid-03 – Gransts for specific schemes"

[D.P. Code: 2235-02-104-KQ-0938]

6. இவ்வாணை நிதி (சந)த் துறையின் அலுவல்சாரா எண் 57005/நிதி (சந)/2016, நாள் 10.02.2017–ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளி நல அலுவலர்கள்.
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)

**நகல்:**

இருப்பு தணிக்கை அலுவலர், சென்னை–9.
நிதித் (சந) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்